# *பத்திரிகை அறிக்கை*

*மே 4, 2007.*

## *2007ஆம் ஆண்டிற்கான மார்டின் எனால்ஸ் விருதை இலங்கை மற்றும் புறுண்டி நாடுகளிலிருந்தான மனித உரிமைப் பாதுகாவலர்கள் கூட்டாக வென்றனர்*

---

**மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கான மார்டின் எனால்ஸ் விருதைத் தீர்மானிக்கும் நீதிபதிகளுள் ஒன்றான சர்வதேச நீதியாளர்களுக்கான ஆணையம், 2007ஆம் ஆண்டிற்கான சாதனையாளர்களை அறிவிக்கின்றது.**

**இராஜன் ஹூல் மற்றும் கோபாலசிங்கம் சிறிதரன் (Rajan Hoole and Kopalasingham Sritharan),** மனித உரிமைகளுக்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் (UTHR) இன் ஆரம்ப ஸ்தாபர்களாகிய இவ்விருவரும் இலங்கை அரசாங்கத்தாலும் அதேபோன்று தமிழீழ விடுதலைப் புலிகளாலும் (த.வி.பு) புரியப்படும் மனித உரிமை மீறல்களைக் கண்காணித்து அவற்றை ஒழுங்காக அறிக்கைகளாக ஆவணப்படுத்தியும் உள்ளனர். தங்களுக்கான தனிப்பட்ட பெரும் அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் கடந்த 18 வருடங்களாக சிறுவர்கள், பெண்கள், சிறுபான்மையினர் மீதான ஆயுத மோதல்களின் விளைவுகள் மற்றும் இடம்பெயர்ந்தவர்கள் பற்றி இவர்கள் தெரிவித்து வந்தனர். மோதல்கள் மும்முரமடைந்ததைத் தொடர்ந்து மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் குழு, திருகோணமலையில் 5 மாணவர்களின் கொலை, முல்லைத்தீவில் இளம் பெண்கள், சிறுமிகள் என 51 பேர் குண்டு வீசிக் கொல்லப்பட்டமை, சிரச்சேதப் பாணியில் படுகொலை செய்யப்பட்ட 17 தொண்டரமைப்புப் பணியாளர்களின் கொலைகள் உட்பட மிக மோசமான அட்டூழியங்களில் பல புதிய விடயங்களைக் கொணரும் விசாரணைகளை மேற்கொண்டனர். எல்லாப் புறத்திலிருந்துமான அதிக தூற்றுதல்களுக்கும் தனியாக முகம் கொடுத்த இவ்விருவரும் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்தான மரண தண்டனை அச்சுறுத்தலுக்கும் உட்பட்டிருந்தனர். அவர்களது சகாவான இராஜனி திரணகமவின் கொலையின் பின்னர் இவ்விருவரும் கடந்த ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக இரகசியமாக செயற்பட வேண்டிய கட்டாயத்திலிருந்தனர், ஆயினும் அவர்களது அறிக்கைகள் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் நன்கு அறியப்பட்டவையாகும்.

**பியரே கிளாவர் போனிம்பா (Pierre Claver Mbonimpa),** டிசம்பர் 1994 வரைக்கும் புறுண்டியில் ஒரு காவல்துறை அதிகாரியாகப் பணியாற்றினார். அவர் மீதான பொய்க் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இரண்டு வருடங்களை அவர் சிறையில் கழித்தார். விடுதலையின் பின்னர், நாட்டின் சிறைச்சாலைகளில் தங்கள் மீதான விசாரணைகளுக்காகக் காத்திருக்கும் அளவுக்கதிகமான 9000 கைதிகள் உட்பட கைதிகளின் உரிமைகளைப் பாதுகாத்து உதவுவதற்கென ஓர் அரச சார்பற்ற நிறுவனத்தை ஸ்தாபித்தார். சித்திரவதைகளுக்கெதிராக அவர் அச்சமின்றிப் பிரச்சாரங்களை மேற் கொண்டதுடன், இராணுவம் மற்றும் காவல்துறையினரின் பிரதிநிதிகள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்தான பகிரங்கக் கேள்விகளுக்கு முகம் கொடுக்கும் நிகழ்ச்சிகளையும் ஒழுங்குபடுத்தினார். அண்மையில் சிவில் சமூக உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்ட பொழுது, ஆபத்துக்களின் மத்தியில் அதற்கெதிராக குரல் கொடுத்தார். ஆயிரக்கணக்கானோரின் உயிர்களைக் காவு கொண்ட உள்ளூர் யுத்தத்தினால் நலிவடைந்த நாட்டில், ஹூட்டு (Hutu), ருட்சி (Tutsi) மற்றும் பட்வா (Batwa) இன மக்களின் உரிமைகளுக்காக அதிகம் தனித்து நின்று போராடுபவராக திரு. போனிம்பா காணப்பட்டார். அவர் ஊடகங்களில் பகிரங்கமாகவே மனித உரிமை மீறல்கள் பற்றி வெளிப்படையாகப் பேசினார்.

மார்டின் எனால்ஸ் விருதிற்கான நீதிபதிகளின் தலைவரான ஹன்ஸ் தூலன் (Hans Thoolen), சாதனையாளர்களை; "மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் என்பன ஓர் ஆபத்தான செயற்பாடாக மாறியிருக்கும் தத்தமது நாடுகளில் அவற்றுக்குச் சார்பாக நிற்கின்ற மனித உரிமை இயக்கங்களின் அடையாளச் சின்னங்கள்" என வர்ணித்தார். முரண்பட்டிருக்கும் இரு சாராரினராலும் புரியப்பட்ட துஷ்பிரயோகங்களைத் திறமையான முறையில் வெளிக்கொணர்ந்த சாதனையாளர்களின் கொள்கை ரீதியான நிலைப்பாட்டையும் அவர் பாராட்டியுள்ளார். மார்டின் எனால்ஸ் விருதின் நீதிபதிகளான பதினொரு ஸ்தாபனங்கள், சாதனையாளர்களின் பாதுகாப்பு மற்றும் எந்தவித துன்புறுத்தல்களுமின்றி அவர்கள் பணிகளில் ஈடுபடுவதை அனுமதித்து உறுதிப்படுத்துமாறு இலங்கை மற்றும் புறுண்டி நாட்டு

அரசாங்கங்களைக் கோரியுள்ளன. மார்டின் எனால்ஸ் விருது வழங்கும் வைபவம் ஒக்டோபர் மாதம் ஜெனீவாவில் நடைபெறும்.

**மார்டின் எனால்ஸ் விருது: மனித உரிமைகள் இயக்கத்திற்கான முக்கியமான விருதாகும்**

மனித உரிமைகளுக்கான மார்டின் எனால்ஸ் விருது, உலகளாவியளவில் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு பாதுகாப்பை வழங்கும் உலகின் பதினொரு முன்னணி மனித உரிமை ஸ்தாபனங்கள் தனித்துவமாக இணைந்து வழங்கும் ஓர் விருதாகும். இதன் நீதிபதிகள் பின்வரும் அரச சார்பற்ற நிறுவனங்களைக் கொண்டுள்ளது: சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்புச் சபை, மனித உரிமைகளுக்கான முதன்மை நிறுவனம், மனித உரிமைகளுக்கான சர்வதேச ஒன்றியம், சித்திரவதைகளுக்கெதிரான உலக ஸ்தாபனம், மனித உரிமைகளுக்கான சர்வதேச சேவை, புரொன்ட் லைன், சர்வதேச நீதி வல்லுநர்களுக்கான ஆணையம், டைக்கோர்னியா ஜேர்மனி, இன்ரர்நஷனல் அலேர்ட், ஹுரிடொக்ஸ். **முன்னைய சாதனையாளர்கள்:** அக்பர் கான்ஜி- ஈரான் மற்றும் ஆர்னல்ட் சுங்கா – சிம்பாப்வே (2006); அக்தம் நாசி – சிரியா, லிடா யுசுபோவா- ருஷ்யா; அலிறியோ உர்பி முனோஸ் - கொலம்பியா; ஜாக்குலின் மௌடீனா, சாட்; சர்வதேச சமாதானப் படை; இமாக்குலீ பேர்ஹஹெக்கா – கொங்கோ ஜனநாயகக் குடியரசு; நட்டாஷா கன்டிக் யூகோஸ்லாவியா; இயட் அல் சாராஜ் - பாலஸ்தீனம்; சாமுவேல் ருயிஸ் - மெக்சிக்கோ; கிளமென்ட் வான்குவூ - நைஜீரியா; அஸ்மா ஜஹாங்கிர் – பாகிஸ்தான்; ஹரி வூ - சீனா.

**மார்டின் எனால்ஸ் விருதின் போஷகர்கள்:** அஸ்மா ஜஹாங்கிர், பாபரா ஹென்றிக்ஸ், ஜோஸ் ரமோஸ்-ஹொர்டா, அடமா டெய்ங், லீன்ரோ டெஸ்போய், ரொபர்ட் புல்கம் மற்றும் தியோ வன் போவன்.

*மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்:* ***Luis Marreiros, Coordinator +41 22 809 49 25***
***marreiros@martinennalsaward.org or visit***
***www.martinennalsaward.org.***